நீதியை சரிகட்டும் தேவனே

O God Who Judges Righteously



Album 24 Song 2

நீதியை சரிக்கட்டும் தேவனே

Mon 30 APR'07

94 சங்கீதம்

நீதியை சரிக்கட்டும் தேவனே
நீதியை சரிக்கட்ட பிரகாசியும்
பூமியின் நியாயத்தை தீர்ப்பவரே
பெருமைக்காரருக்கு பதிலளியும்

துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்திருப்பர்?
துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூருவர்?
அக்கிரமக்காரர் எதுவரைக்கும் வாயாடுவர்?
அக்கிரமக்காரர் எதுவரைக்கும் பெருமை பாராட்டுவர்?
(நீதியை)

மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்?
மிருககுணமுள்ளவரே, எப்பொழுது உணர்வடைவீர்?
காதை உண்டாக்கினவர் கேளாமல் போவாரோ?
கண்ணை உருவாக்கினவர் காண மாட்டாரோ? (நீதியை)

மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்?
மிருககுணமுள்ளவரே எப்பொழுது உணர்வடைவீர்?
ஜனங்களை தண்டிக்கிறவர் கடிந்து கொள்ளாரோ?
மனுஷனுக்கு அறிவை போதிக்கும் கர்த்தர் அறியாரோ?
(நீதியை)

உமது ஜனத்தை நொறுக்குகின்றனர்
உமது சுதந்தரத்தை ஒடுக்குகின்றனர்
விதவையையும் பரதேசியையும் கொன்றுபோட்டனர்
திக்கற்ற பிள்ளைகளை கொலை செய்து புதைத்தனர்
(நீதியை)

நியாயத்தை நீதியுமாய் திரும்பச் செய்திடும்
உம்முடைய ஆறுதலால் ஆத்துமாவைத் தேற்றிடும்
கர்த்தர் ஜனத்தை நெகிழவிடமாட்டார்.
தமது சுதந்தரத்தை கைவிடவே மாட்டார். (நீதியை)

KJC-DNN

